மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பொருட்காட்சிகளை நடத்துவதற்குத் தடையேதுமில்லை. ஆனால் அரசாங்கம் சில விதிகளை கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறது. திறமையான விளையாட்டுகள், சூதாட்டங்கள் போன்றவை நடத்தப்படக்கூடாது என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே, தொழில் வளர்ச்சி ரீதியான பொருட்காட்சிகளோ அல்லது அறிவு வளர்ச்சி ரீதியான பொருட்காட்சிகளோ நடத்த வேண்டுமென்று தனியார்கள் விரும்பினால் அரசாங்கம் அனுமதி கொடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 118, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

118—

பூதலூர் அரசு பெண்கள் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

*** 35678—***திரு. ப. கலியபெருமாள்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, பூதலூரில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்குப் போதிய இடவசதி இன்மையால், பள்ளிக்கு இடம் வழங்கி கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவையாறு தொகுதி, பூதலூரில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கென சொந்தமாக 17 செண்ட் இடம்தான் உள்ளது. கூடுதல் நிலம் பெறுவது குறித்து இப்பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம், கட்டிட மதிப்பீட்டில் 50 சதவீதம் தொகையை கட்ட முன்வருமானால் மீதமுள்ள 50 சதவீதம் பணத்தை அரசு நிதியிலிருந்து ஒதுக்கி கட்டடம் கட்டுவதற்கு நிலம் கிடைத்ததற்குப் பிறகு ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியில் பூதலூரில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு போதிய இடவசதியின்மையால் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு இடம் வழங்கி கட்டித்தர அரசு முன்வருமா என்று கேட்டுள்ளேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பள்ளியின் பெற்றோர்

1995 மார்ச் 27]

ஆசிரியர் கழகம் கட்டிட மதிப்பீட்டில் 50 சதவீதம் அளித்தால் அரசு அதற்கு சமமான தொகையை அரசு நிதியிலிருந்து ஒதுக்கி கட்டடம் கட்டப்படும் என்று சொன்னார்கள். அதை விரைவில் நடத்தித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரைவில் என்றால், எவ்வளவு வேகமாக நீங்கள் கொடுக்கிறீர்களோ அவ்வளவு வேகமாக முடியும், உங்கள் கையில்தான் இருக்கிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 658 மாணவிகள் பயின்று வருகிறார்கள். அங்கே இடம் இல்லாத காரணத்தால் அரசு மேனிலைப் பள்ளியில் இருக்கிற மூன்று கூரை கட்டடங்களிலும், ஆறு அஸ்பெஸ்டாஸ் வகுப்பறைகளிலும் இந்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதற்கென கூடுதல் நிலம் வேண்டுமென்று பள்ளித் தலைமையாசிரியர் அவர்களும், பெற்றோர் ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்தவர்களும் முயற்சி எடுத்து வருகிறார்கள். இடம் கிடைத்ததற்குப் பின்னால்தான் கட்டடம் கட்டுவதைப் பற்றி முடிவெடுக்க முடியும். ஆகவே இடம் கிடைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கி விட்டு, அடுத்த கட்டடம் கட்டுகிற முயற்சியில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கலியபெருமாள், 17 சென்ட் நிலத்தை வைத்துக்கொண்டு இரண்டாவது கேள்வியா? சரி, கேளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் உயர்நிலைப் பள்ளியினை கட்டுவதற்கு 17 சென்ட் நிலம்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பள்ளிக்கு இடம் வாங்கித் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அந்த இடத்தை நான் வாங்கித் தருகிறேன். கல்விக்காக அதிகமாக நிதியை ஒதுக்கி செலவு செய்துவரும் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், பின்தங்கிய பகுதியாகிய பூதலூர் பகுதியில் அந்த பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றுகிறவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல அங்கேயுள்ள ஆண்கள் மேனிலைப் பள்ளியில் இருந்து பணியாற்றுகிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில்தான் அங்கே 1½ இலட்சத்திற்கு ஒரு கட்டடம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டப்பட்டிருக்கிறது. மேலும் அங்கே அந்தப் பகுதியில் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல அந்த பெற்றோர் ஆசிரியர் கழகத்தோடு நானும் இணைந்து அதற்கு போதிய பணத்தை செலுத்துவதற்கு தயாராக இருக்கிறேன். அந்த அளவுக்கு அதை

செலுத்தியவுடன் அமைச்சர் அவர்கள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை கட்டுவதற்கு வேண்டிய வசதிகளை செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் பெறுவதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்தால் அரசு 50 விழுக்காடு தொகையை தருவதற்கு தயாராக இருக்கிறது என்பதை முன்பே தெரிவித்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 119, திரு. கோ. காளன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

119—

அம்பத்தூரில் உள்ள முருகப்பா நூலகத்தை விரிவுபடுத்தல்

***35767**-*திரு. கோ. காளன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அம்பத்தூரில் இயங்கி வரும் முருகப்பா நூலகத்தை விரிவுப் படுத்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை அம்பத்தூரில் இயங்கிவரும் முருகப்பா நூலகம் முழுநேர நூலகமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நூலகத்தின் கட்டடத்தை விரிவு படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய இணைப்புக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர், இந்நூலகத்தின் பயன்பாடு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.15

திரு. கோ. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருகப்பா நூல் நிலையம் 1971—ஆம் ஆண்டு மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஏறக்குறைய 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் அந்த நூலகத்திலே சேர்ந்திருக்கிறார்கள். அன்றாடம் 300-க்கு மேற்பட்டவர்கள் அங்கே படிக்கிறார்கள். 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் அங்கே இருக்கின்றன. அந்த இடம், அம்பத்தூர் நகராட்சியில் 1 லட்சம் ஜனத்தொகை